**நாள். 25.03.2025**

**O.S.No. 47/2023**

**வா.சா – 1**

**திருமதி. வேதவள்ளி (எ) வேதவதி**

க/பெ. வெங்கடேஷ்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்குவிசாரணை**

1. நான் படிக்கவில்லை. எனக்கு கையொப்பம் போடதெரியும். எனக்கு கையொப்பம் தமிழில்தான் போடதெரியும். ஆஜர் பிரதிவாதி சகாதேவன் எனது கணவரின் உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். எனது கணவருடன் பிறந்தவர்கள் சுந்தரம் மற்றும் பிரதிவாதி ஆவார்கள். எனது நாத்தனார் பெயர் கோவிந்தம்மாள் (எ) கண்மணி என்றால் சரிதான். தற்போது எனது நாத்தனார் உயிருடன் இல்லை ; இறந்துவிட்டார். எனக்கு இரண்டு மகன்கள். எனது மகன்கள் இருவரும் கூலிவேலை தான் செய்கிறார்கள். பெங்களூர் டவுனில் பேப்பர் கடை, காய்கறி கடை, மளிகை கடை வைத்திருந்தேன் என்றால் சரிதான். தற்போது காய்கடை மட்டுமே வைத்துள்ளேன். காய்கறி கடை உள்ள இடத்திலேயே தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். பெங்களூரில் உள்ள கடை மற்றும் வீடு ஆகியவை எப்போது கட்டினோம் என்று ஞாபகம் இல்லை.

2. எனது கணவர் படிக்கவில்லை. கூலிவேலை செய்கிறார். நான் வைத்துள்ள கடையின் விஸ்திரணம் 1020 சதுரடி என்றால் சரிதான். நான் பெங்களூர் போய் 10 –20 வருடம் இருக்கும். 28.07.2003ம் தேதியிலேயே எனது கணவரின் பெயரில் அந்த இடத்தை வாங்கி வீடுகட்டி கடையையும் நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. கடந்த 40 வருடமாக பெங்களூரிலேயே இருந்துவருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர்த்து பிற சொத்துக்களும் எனது கணவரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமானது எனது கணவர் எனக்கு எழுதிகொடுத்த கிரயப்பத்திரம் என்றால் சரிதான். எனது கணவரிடம் ரூ.15,000/– கொடுத்து சொத்தை வாங்கியதாக சாட்சி கூறுகிறார்.

3. நானும், எனது கணவரும், எனது மகன்களும் ஒன்றாக தான் வாழ்கிறோம் என்றால் சரிதான். எனது கணவரின் வருமானத்தை வைத்து நாங்கள் அனைவரும் கூட்டுகுடும்பமாக வாழ்ந்துவருகிறோம் என்றால் சரிதான். எனது கணவரிடம் ரூ.15,000/– கொடுத்து வீட்டை கிரயம்பெற்றதாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. வழக்குசொத்து ஊர் நத்தம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா எனது கணவர் பெயரில் உள்ளது. எனது மாமனாரின் பெயர் G.L.பெருமாள்கவுண்டர் ஆகும். எனது மாமனார் எம்ஜிஆர் கட்சியில் இருந்தார். அதிமுக கட்சியில் பொறுப்பில் எனது மாமனாரும், எனது கணவரும் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது கொளுந்தனாரும் அதிமுகவில் தான் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தில் எனது மாமனார் அதிமுக கிட்டம்பட்டி கிளை அலுவலகத்தை நடத்திவந்தார் என்றால் சரிதான். மேற்படி அலுவலகம் 1990 லிருந்து செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி அலுவலகத்திற்கு மின்இணைப்பு மற்றும் சர்வீஸ் இணைப்பு பெறப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அதற்கு மின்இணைப்பும், வீட்டுவரியும் செலுத்தப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. மேற்படி கட்சி அலுவலகத்திற்கு எனது மாமனார் பெயரில் மின்இணைப்பு வரிவகையறா செலுத்தப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. மேற்படி அலுவலக கட்டிடம் தற்போதுவரை அப்படியே உள்ளது என்றால் சரிதான். அதனை பிரதிவாதி தற்போது வரை நிர்வாகம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. அந்த கட்டிடத்திற்கு மின்இணைப்பு பெறவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

5. தாவா சொத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் கதவு எண்.1/123 என்றாலும், அதற்கு சர்வீஸ் மின்இணைப்பு எண்.83 பெறப்பட்டு வரி செலுத்தப்பட்டுவருகிறது என்றால் சரியல்ல. எனது கணவர் பெயரில் பட்டா மாறுதல் செய்தது தவறு என்பதால் அதனை ரத்துசெய்ய கோரி எனது மாமனார் தாசில்தார், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அதன் பேரில் வருவாய் துறை அதிகாரிகள் எனது கணவரையும், மாமனாரையும் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. 06.03.2015ம் தேதியில் பென்னாகரம் வட்டாட்சியர் அவரது அலுவலக ந.க.எண்.179/2015ன்படி எனது கணவரை விசாரித்தார் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தில் காலி இடமாக தான் காட்டியுள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் அமைந்துள்ள கட்டிடத்தை காட்டாமல் காலி இடமாக காட்டி மோசடி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டாவிலேயே கட்டிடம் இருந்ததற்கான குறிப்புகள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவரின் குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக 05.05.2023ம் தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு தனக்கு தெரியாது என்று கூறுகிறார். அவ்வாறு பாகப்பிரிவினை ஆவணத்திற்கு பின்னிட்டு 18.07.2023ம் தேதியில்தான் இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடுகட்டி கட்டிடம் அமைத்து கடையில் மின்இணைப்பு பெற்று ஊர்அறிய உபயோகித்து வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

7. எனது மாமனாரின் காலத்திற்கு பின்னிட்டு பிரதிவாதி தான் கட்சி அலுவலகத்தை நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. எனது மாமனார் இறந்து 10 வருடம் இருக்கும் என்றால் சரிதான். எனது மாமனாரின் இறப்பிற்கு பிறகு நாங்கள் பெங்களூரில் தான் குடியிருந்துவருகிறோம் என்றால் சரியல்ல. இரண்டு இடங்களிலும் குடியிருந்து வருகிறோம். எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து எனது கணவர் மோசடியாக பட்டா பெற்று எனக்கு கிரயம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள சிமெண்ட் போட்ட வீட்டை மறைத்து கிரயம்செய்து அதன் அடிப்படையில் இவ்வழக்கை பொய்யாக தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. வழக்குசொத்தின் சதுரடி மதிப்பு எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு ரூ.2,00,000/- இருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மை சங்கதிகளை மறைத்து எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பட்டா பெற்றதால் தான் எனது மாமனார் மனமுடைந்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. உண்மைகளை மறைத்து கிரயம் ஆவணம் ஏற்படுத்திகொண்டதால் கிரயஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எந்தவொரு உரிமையும் வந்துவிடாது என்றால் சரியல்ல. காலி இடத்தை பொறுத்து தாக்கல்செய்துள்ள இவ்வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரயஆவணத்தில் ஜாகாவில் வீடு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. வழக்கு சொத்து விபரத்திலும் சாலையை குறிப்பிட்டு வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. சாலையை குறிப்பிட்டு தான் எழுதியுள்ளோம். சாலை என்றால் ஓட்டுகொட்டாய். தாவா சொத்துவிபரம் தவறானது என்றால் சரியல்ல. தவறான சொத்து விபரத்தை குறிப்பிட்டு உண்மையை மறைத்து வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றாலும், நான் தாக்கல்செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/-Tmt.J.Nagalakshmi@ Vijayarani,
District Munsif-cum-Judicial Magistrate,
Pennagaram.